# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2011/2012
## (January, 2014)
## ECO 1112 Fundamentals of Micro Economics

நேரம்: 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவையும் ஏனைய வினாக்களில் இரண்டையும் தெரிவு செய்து, மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

---

01. (அ) பொருளியல் என்னும் எண்ணக்கருவினை விளக்குக.
(05 புள்ளிகள்)

(ஆ) சிற்றினப் பொருளியலுக்கும் பேரினப் பொருளியலுக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.
(05 புள்ளிகள்)

(இ) பொருளாதர இலக்குகளைக் குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

(ஈ) ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவினை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?
(05 புள்ளிகள்)

(உ) உற்பத்திச் சாத்திய வளையியின் பயன்பாடுகள் யாவை?
(05 புள்ளிகள்)

(ஊ) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் யாவை?
(07 புள்ளிகள்)

(எ) அல்பிரட் மார்சலினுடைய (Alfred Marshall) நுகர்வோர் நடத்தைக் கோட்பாட்டினை விளக்குக.
(08 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

02. (அ) கேள்வி விலை நெகிழ்ச்சி என்றால் என்ன?
(05 புள்ளிகள்)

(ஆ) எவ்வாறு நீர் புள்ளி நெகிழ்ச்சியில் இருந்து வில் நெகிழ்ச்சியை வேறுபடுத்துவீர்?
(05 புள்ளிகள்)

(இ) பின்வரும் கேள்வி மற்றும் நிரம்பல் தொழிற்பாடுகளைக் கவனத்தில் கொள்க.

$Qd = 10 - 4p$

$Qs = -2 + 8p$

(i) சமநிலைப் புள்ளியில் விலை, தொகை மட்டங்களைப் கணிப்பீடு செய்க.
(05 புள்ளிகள்)

(ii) கேள்விக் கோடானது $Qd = 16 - 4p$ ஆக நகர்கிறது எனின் புதிய சமநிலை விலை மற்றும் தொகை யாது?
(05 புள்ளிகள்)

(ஈ) புறநடைக் கோள்வி என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(05 புள்ளிகள்)

(உ) கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.
(05 புள்ளிகள்)

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

03. (அ) சமபயன் வளையியின் பிரதான இயல்புகளை விளக்குக.
(05 புள்ளிகள்)

(ஆ) நுகர்வோன் சமநிலையின் பிரதான நிபந்தனைகளை சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

(இ) பின்வருவனவற்றை வரைபட உதவியுடன் விளக்குக.
(i) நுகர்வோன் மிகை
(ii) எல்லைப் பதிலீட்டு விகிதம்
(iii) நிரம்பல் மாற்றம்
(12 புள்ளிகள்)

(ஈ) சந்தைச் சமநிலையும் அரச தலையீடும் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

04. (அ) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(06 புள்ளிகள்)

(ஆ) நீண்டகால உற்பத்திக் கோட்பாட்டினை விளக்கும் விதிகளை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(06 புள்ளிகள்)

(இ) நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்கால சமநிலையை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஈ) தனியுரிமைச் சந்தையின் எல்லை வருமானம், சராசரிவருமானம் என்பவற்றிற்கான தொடர்பினை விளக்குக.
(05 புள்ளிகள்)

(உ) ஒரு நிறுவனம் அனுபவிக்கும் அகப்புறச் சிக்கனங்கள் எவை? விளக்குக.
(05 புள்ளிகள்)

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

05. பின்வருவனவற்றிற்க சிறுகுறிப்பு எழுதுக.
(அ) வளங்களின் அமையச் செலவு
(ஆ) உற்பத்தி முதலாக்கம்
(இ) நேர்ப் பொருளியல் மற்றும் நியமப் பொருளியல்
(ஈ) கட்டுப்பாட்டு விலை
(உ) நீண்டகால சராசரிச் செலவு
(ஊ) வெளிவாரி விளைவுகள்

(06 x 05 = 30 புள்ளிகள்)